தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

ரூ. 15/- | மலர் 19 - இதழ் 03 - ஜூலை 2017 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

மாவட்ட திட்ட இயக்குனர்களுடன் காணொலி மூலம் கலந்துரையாடல்

மகளிருக்கு ஆட்டோக்கள் வழங்குதல்



திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

'பெண்கள் நாட்டின் கண்கள்' என்ற கூற்றிற்கு ஏற்ப, பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாடு களின் விளைவாக பல துறைகளில் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். மேலும் அனைத்துத் துறைகளிலும் இன்று சுய உதவிக் குழு இயக்கம் சிறப்பான இடத்தில் உள்ளது. அதற்கு மேலும் அணி சேர்ப்பது போல் நடந்து முடிந்த சட்ட ம ன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளனர்.

அதன்படி சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ. 7,000 கோடி வரை வங்கிக் கடன் இணைப்பு வழங்குதல், 5000 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி யாக தலா ரூ. 2 இலட்சம் வீதம் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 4000 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்க ரூ. 6 கோடி ஒதுக்கீடு, பெண்களுக்கு விவசாயம் மற்றும் விவசாயம் சாராத தொழில்களில் பயிற்சிகள் வழங்குதல், 1000 நகர்ப்புற இளம்பெண்களுக்கு வீட்டு மின் சாதனங்கள் மற்றும் சமையலறை சாதனங்கள் பழுது நீக்குதல் குறித்த பயிற்சி வழங்குதல், 50,000 பெண்களுக்கு திறன் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல் என பல்வேறு அறிவுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிப் பாதையில் மேலும் ஒரு மைல் கல்லாக அமையும்.

இருப்பினும் எவ்வளவு திட்டங்கள் வந்தாலும் அதை வெற்றி பெற வைப்பது நீங்கள் தான். எனவே ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக்கு உங்களின் பங்களிப்பு சிறப்பாக இருக்கும் என்பதை அனைவரும் அறிவர்.

தற்போது பள்ளி மற்றும் கல்லூரிகள் திறக்கப்பட்டு விட்டன. உங்கள் வீட்டுப் பிள்ளைகள் கல்விக் கூடங்களுக்குச் செல்ல துவங்கி விட்டனர். அத்துடன் மழைக்காலமும் துவங்கி விட்டது. கோடைக் காலத்தில் வெயிலின் கொடுமையை அனுபவித்த நாம் தற்போது மழைத் துளிகளை பார்த்து பரவசப்பட்டு நிற்கிறோம். வான் கொடுத்த பரிசான மழை நீரை நாம் சேமிக்க வேண்டும். இது குறித்து நம் பிள்ளைகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மேலும் மழைக்காலம் என்பதால் பல்வேறு நோய்களின் தாக்கமும் இருக்கும். அத்தகைய நோய்களில் இருந்து நம்மையும் மற்றவர்களையும் காக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதை நீங்கள் செய்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்கு எனது வாழ்த்துகள்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் 05

வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கிச் சேவைகள் 08

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 23

சமுதாயப் பட்டறிவுப் பயணம் 26

காலிஃபிளவர் பிரியாணி 10

நாட்டுக் கோழி வளர்ப்பு 34

உலக வங்கிக் குழுவினரின் மக்கள் நிலை ஆய்வு 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் குறித்த செய்திகளை மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாகப் படிக்கும் போது எங்களுக்கு முற்றம் இதழ் சிறந்த தோழியாக இருக்கிறது என்பது புரிகிறது. முற்றம் இதழ் மேலும் வளர வாழ்த்துகிறோம்.

திருமதி. லட்சுமி சந்திரன்,
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்.

தமிழகத்தில் கிராமப்பகுதிகளில் நிலவி வரும் வறுமையைப் போக்கத் துவக்கப்பட்ட புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கூட்டமைப்புகள் போன்றவற்றின் வெற்றிக் கதைகளும் மாதந்தோறும் சிறப்பாக வெளியிடப்படுகின்றன.

திருமதி. சித்ரா விஜயராகவன்,
கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
அதிகாரிப்பட்டி, சேலம் மாவட்டம்.

ஊரக வளர்ச்சித் துறையின் சீரிய செயல்பாடுகளின் காரணமாக கிராமப்புறங்களின் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை மாறி வருவதை அறிந்து கொண்டோம். சுகாதாரம் குறித்த கட்டுரைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் சிறப்பாக இருக்கின்றன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
கொடுங்காளூர் ஊராட்சிக் கூட்டமைப்பு
புதுக்கோட்டை மாவட்டம்.

தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக நலத்திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கும், அது குறித்த செய்திகளை சிறப்பாக வெளியிட்டு வரும் முற்றத்திற்கும் எங்களது வாழ்த்துகள்.

நிர்வாகிகள் / உறுப்பினர்கள்,
நட்சத்திரம் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 19 – இதழ் 03 – ஜூலை 2017
விலை ரூ. 15/-

கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

சு. சிநேகலதா
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

ஜா. பெஞ்சமின் விக்டர்
தகவல் தொடர்பு வல்லுநர் (பொ)

பொறுப்பாசிரியர்
சு. மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

அகிம்சை என்னும் ஆயுதம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

இந்தியத் திருநாட்டின் எழுபதாவது சுதந்திர தினத்தை இந்த ஆண்டு கொண்டாடுவதில் நாம் பெருமை அடைகின்றோம். இந்த நாட்டின் செல்வங்கள் அந்நியர்களால் அள்ளிச் செல்லப்பட்டது. அவர்களின் தேவைகளுக்கு மட்டுமே கட்டமைப்புகளை உருவாக்கி பயன்படுத்தி வந்தனர். மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதி களைப் பற்றி அவர்கள் பெரிதும் கவலைப்படவில்லை. அவர்களால் கொடுக்கப்பட்ட கல்வியானது ஆங்கிலம் பேச தெரிந்தவர்கள் மட்டுமே அறிவாளிகள் என்ற தோற்றத்தை உருவாக்கியது. இந்த ஆங்கில கல்வியைக் கூட செல்வந்தர்கள் மட்டுமே பெற்றுக் கொள்ளக் கூடிய சூழலை உருவாக்கினர். மக்களைக் கட்டாயப்படுத்தி வரி வசூல் செய்து, அந்த வரிப்பணத்தில் சுகபோகமாக வாழ்ந்து வந்தனர். பல முக்கிய பதவிகளில் வெள்ளையர்களே பணியமர்த்தப்பட்டு, அதிகாரம் செய்து வந்தனர். இவை அனைத்தும் நாம் யாவரும் அறிந்ததே.

அகிம்சை என்ற ஆயுதத்தைக் கொண்டு, வெள்ளையர்களை இந்த மண்ணில் இருந்து விரட்டி அடித்தனர். அவர்களை விரட்டிய தியாகிகளுக்கு நாம் தலை வணங்குவோம். சுதந்திரத்திற்குப் பின் கடந்த எழுபது ஆண்டுகளில் மிக அபரிமிதமான வளர்ச்சியையும் அடைந்துள்ளோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. வறுமை ஒழிப்பு, கல்வி வளர்ச்சி, நவீனமான கட்டமைப்புகள், தொழிற்சாலைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் என பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பெற்று, இந்திய நாடு ஒரு வல்லரசாக உருவெடுத்து வருவதை உலக நாடுகள் உற்று நோக்குகின்றன.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிகாத்து பயனடையக் கூடிய இந்திய குடிமக்களாகிய நாம், பிரிவினை சக்திகளால் உருக்குலைந்து சுதந்திரத்தை வீணடித்து விடக் கூடாது. மதத்தாலும், சாதியாலும், மொழியாலும் இந்திய குடிமக்கள் பிரிக்கப்பட்டு விடக் கூடாது. குழப்பங்களை விளைவித்து அதில் குளிர்காயும் பிரிவினை சக்திகளை அடையாளம் கண்டு, அவற்றை ஒதுக்கித் தள்ள வேண்டியது நமது பெரும் கடமையாகும். 120 கோடிக்கு மேல் மக்கள் தொகை என்பது கட்டுப்படுத்த முடியாத, மேலாண்மை செய்ய முடியாத, நிர்வகிக்க முடியாத ஒரு பெரும் பிரச்சனையாகும். சுதந்திர இந்தியா இந்த சவாலை எதிர் கொள்ள வேண்டிய சூழலில் உள்ளது. இச்சூழலில் புதியதாக பதவி ஏற்க இருக்கும் மேதகு குடியரசு தலைவர் அவர்களை நாம் வரவேற்போம். சுதந்திரத்தைப் பேணிகாக்க அவரோடு ஒத்துழைப்போம். முற்றம் அனைவருக்கும் சுதந்திர தின நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது. ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

நீலகிரி மாவட்டத்தில் புகழ் பெற்ற 121வது மலர் கண்காட்சி நீலகிரி தாவரவியல் பூங்காவில் 19.05.2017 முதல் 21.05.2017 வரை நடைபெற்றது. இம்மலர்க் கண்காட்சியை துவக்கி வைத்து, விழா தலைமையேற்று சிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 145 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 5.76 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் உதவிக்கான காசோலைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர். துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், நீலகிரி மாவட்ட ஆட்சியர் முனைவர் பெ. சங்கர், இ.ஆ.ப., அவர்கள், நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஏலகிரி கோடை விழா

வேலூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி மலையில் 2017-18ஆம் ஆண்டிற்கான ஏலகிரி கோடை விழா 27.05.2017 மற்றும் 28.05.2017 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திடும் வகையில் விற்பனை அரங்குகள் இடம் பெற்றிருந்த கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இக்கண்காட்சியினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் திறந்து வைத்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

இளநீர் விற்பனை மையம் திறப்பு

வேலூர் மாவட்டத்தில், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், வேலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடையஞ்சாத்து பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுவின் இளநீர் விற்பனை மையத்தினை 07.06.2017 அன்று, வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் முன்னிலையில், வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. ஆ. இராமன், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார்.

இந்த விற்பனை மையத்தில் காய்கனிகள் மற்றும் சிறுதானியத்தால் செய்யப்பட்ட உணவுப் பொருட்களும் விற்பனை செய்யப்படும். இந்த விற்பனை மையம் வேலூர் மாநகராட்சியில் இயங்கி வரும் விடியல் மகளிர் சுய உதவிக் குழுவால் நடத்தப்படுகிறது. ■

வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் 04.07.2017 அன்றும், ரிஷிவந்தியம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் 05.07.2017 அன்றும் இளைஞர்களுக்கான வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இந்த வேலைவாய்ப்பு முகாமில் 37 தொழில் நிறுவனங்களும், 1264 வேலை நாடுனர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியினை விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. சு. சுந்தர்ராஜன் அவர்கள் துவக்கி வைத்து, ஊரக வாழ்வாதார இயக்கத் தின் செயல்பாடுகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புப் பயிற்சிகள் மற்றும் நேரடி வேலைவாய்ப்பு ஆகியவை குறித்து விளக்கவுரையாற்றி, தனியார் நிறுவனங்களில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்ட 227 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமிற்கான ஏற்பாடுகளை திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உதவித் திட்ட அலுவலர் திரு. இரா. கமல்ராஜ் மற்றும் மகளிர் திட்டத்தின் களப் பணியாளர்கள் மேற்கொண்டிருந்தனர். ■

மாங்கனிக் கண்காட்சி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கிருஷ்ணகிரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில், 17.06.2017 முதல் 16.07.2017 வரை மாங்கனிக் கண்காட்சி (மாவட்ட விருப்பக் கண்காட்சி) நடைபெற்றது. இக்கண்காட்சியினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா, உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சிகள்

தேனி மாவட்டத்தில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணியாற்றிய குடும்பத்தைச் சேர்ந்த 250 நபர்களுக்கு மகளிர் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் MGNREGA திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்திறன் பயிற்சிகளான தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி மற்றும் மின் பணியாளர் (Electrician) ஆகிய தொழிற்பயிற்சிகள் ஜெயராம் கல்வி அறக்கட்டளை, சோசியல் மாஸ் சர்வீஸ் டிரஸ்ட், ஸ்ரீ மாருதி அறக்கட்டளை, KI - Infitech Service Pvt. Ltd., மற்றும் அமிர்தா கல்வி அறக்கட்டளை ஆகிய நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டது.

பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு 10.07.2017 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. மு. கல்யாணசுந்தரம் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மகிளா கிசான் வேளாண் திட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில், மகளிர் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் கும்மிடிப்பூண்டி மற்றும் சோழவரம் ஆகிய வட்டாரங்களில் 2016-2017ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயல்பாடுகள் குறித்து சமுதாய வள பயிற்றுனர்கள் பயிற்சி மற்றும் மகிளா கிசான் பயிற்சிகள், தேசிய வேளாண் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சிகளின் ஒரு பகுதியாக 20.06.2017 அன்று மகிளா கிசான்களைப் பார்வையிட வருகை தந்த, திரு. குணால் பாண்டியோபாத்தியாய் அவர்களும், திருமதி. ஷோபா அவர்களும், கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் உள்ள நேமலூர் ஊராட்சியில் மகிளா கிசான்களுக்கு இயற்கை முறையில் பூச்சிகளை விரட்டுவதற்கான பஞ்சகாவ்யம் தயாரிப்பதற்கான செயல்முறை விளக்கம் அளிப்பதை பார்வையிட்டனர். பின்னர் சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் மகிளா கிசான்களை சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த பயிற்சியில் கலந்து கொண்ட மகிளா கிசான்கள், இயற்கை விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் மகசூல், நிலவளம் போன்ற நன்மைகள் குறித்தும் அறிந்து கொண்டனர். மேலும் தங்கள் பகுதிகளில் இயற்கை விவசாயத்தை செயல்படுத்துவது குறித்தும் முழுமையாகத் தெரிந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர், விவசாய ஆலோசகர், தேசிய வேளாண் நிறுவன ஒருங்கிணைப்பாளர், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வட்டி மானியம்

நமது 'முற்றம்' இதழில் சில மாதங்களுக்கு முன்னர், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களுக்கான 'வட்டி மானியம்' பற்றி சுய உதவிக் குழு மகளிர் தெரிந்து கொள்ள தொடராக எழுதியிருந்தோம். ஆனால் வட்டி மானியம் பற்றிய முழுமையான விழிப்புணர்வு அனைத்து மகளிரிடையே சென்றடையவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, அனைத்து மகளிருக்கும் பயனளிக்க இந்த இதழில் மறுபடியும் வட்டி மானியம் குறித்த சிறப்பு அம்சங்களை வெளியிடுகிறோம்.

வட்டி மானியம் :

வங்கிகளில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களில் ரூபாய் மூன்று இலட்சம் வரையிலான கடன்களுக்கு வங்கிகளின் நடைமுறையில் விதிக்கப்படும் வட்டி விகிதத்திலிருந்து 5.5% முதல் 8.5% வரை வட்டியைக் குறைத்து, 4% முதல் 7% வட்டியில் வங்கிக் கடன்கள் கிடைக்க 'வட்டி மானிய திட்டம்' அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வட்டி மானியம் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது.

வட்டி மானியம் பிரிவு – 1

மாவட்டங்கள் :

தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திண்டுக்கல்

தகுதிகள்:

வங்கியின் மூலம் கடன் பெற்ற அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்கள்

கடன் அளவு, வட்டி விகிதம் :

வங்கிகள் மூலம் குழுக்கள் பெறும் கடன் தொகையில் ரூ. 3 இலட்சம் வரையிலான கடனுக்கு, 7% வட்டி விதிப்பதின் மூலம் வட்டி மானியம் 5.5% முன் கூட்டியே கடன் வழங்கும் பொழுதே வழங்கப்படுகிறது. (ரூ. 16,500/– வரை)

வட்டி மானியம் :

நடைமுறையில் உள்ள வங்கி வட்டிக்கும், 7%க்கும் உள்ள வித்தியாசம், அதிகபட்சம் 5.5%

கூடுதல் வட்டி மானியம் : 3% (வருடத்திற்கு) –கடன் தொகையை மாதந்தோறும் தவணை தவறாது திரும்பச் செலுத்தும் குழுக்களுக்கு மட்டும் கூடுதல் வட்டி மானியம் 3% வழங்கப்படும் (ரூ. 9,000/– வரை)

ஆக ரூ. 3 இலட்சம் வரையிலான வங்கிக் கடனுக்கு குழுக்கள் செலுத்தும் நிகர வட்டி 4% மட்டுமே.

அரசு வட்டி மானியம் ரூ. 25,500/– வரை சுய உதவிக் குழுக்கள் பெற வாய்ப்புண்டு.

வட்டி மானியம் பிரிவு – 2 :

மாவட்டங்கள் :

மேற்கூறிய 9 மாவட்டங்கள் நீங்கலாக 22 மாவட்டங்கள்

தகுதிகள்:

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் அங்கத்தினராக உள்ள குழுக்கள். குழுவில் 70% உறுப்பினர்கள் இலக்கு மக்களாக இருத்தல் வேண்டும்.

கடன் தொகையை மாதந்தோறும் தவணை தவறாது செலுத்தியிருக்க வேண்டும்.

கடன் அளவு, வட்டி விகிதம் :

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிகள் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் (10% மேல்) மேற்கூறிய கடனில் ரூ. 3 இலட்சம் வரையிலான கடனுக்கு வட்டி மானியம் – 5.5% (வங்கி வட்டிக்கும், 7%க்கும் உள்ள வித்தியாசம் அதிகபட்சம் 5.5%) வழங்கப்படும். (ரூ. 16,500/– வரை) ஆக ரூ. 3 இலட்சம் வரையிலான வங்கிக் கடனுக்கு குழுக்கள் செலுத்தும் நிகர வட்டி – 7% (வருடத்திற்கு) மட்டுமே.

கடன் தொகையை முறையாக தவணை தவறாது குறித்த காலத்தில் திரும்பச் செலுத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வட்டி மானிய தொகையாக ரூ. 16,500/– வரை (ரூ. 3,00,000 x 5.5%) பெற வாய்ப்புண்டு.

பொதுவாக, வங்கிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 3 இலட்சத்திற்கும் அதிகமாக கொடுக்கப்படும் கடன்களில், ரூபாய் 3 இலட்சம் வரையில் உள்ள கடன்களுக்கு வட்டி மானியத்துடனும், ரூபாய் 3 இலட்சத்திற்கும் மேல் உள்ள கடன்களுக்கு வங்கிகளின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்திலும் வங்கிகள் வட்டி வசூலிக்கும்.

நினைவில் கொள்க

வங்கிக் கடன்கள்	பிரிவு 1 மாவட்டங்கள்	பிரிவு 2 மாவட்டங்கள்
கடன் ரூ. 3 இலட்சம் வரை	7% வட்டி	10%க்கு மேல்
வட்டி மானியம்	5.5% + 3% = 8.5%	5.5%
நிகர வட்டி (ரூ. 3 இலட்சம் வரையிலான கடன்கள்	4%	7%

கே. எம். திருநாவுக்கரசு,
ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்),
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் ஆய்வு

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகக் கூட்ட அரங்கில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களின் தலைமையில் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 13.06.2017 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தனிநபர் கடன் வழங்குதல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து, மருங்காபுரி வட்டாரம், கோவில்பட்டி களப்பகுதி அலுவலகத்தில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு. கு. ராசாமணி, இ.ஆ.ப. அவர்கள், கலந்து கொண்டு, பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதுடன், தனிநபர் கடனுதவியும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. ஜி. ராமையா அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. சி. முத்து, திரு. ப. காமராஜ், களப்பணி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

காலிஃபிளவர் பிரியாணி

தேவையான பொருட்கள்

பாசுமதி அரிசி – அரை கிலோ, வெங்காயம் – கால் கிலோ, தக்காளி, இஞ்சி, பூண்டு விழுது – தலா 150 கிராம், காலிஃபிளவர் – 1, தயிர் – 50 மில்லி, பால் – 100 மில்லி, எண்ணெய், முந்திரிப்பருப்பு – தலா 100 கிராம், பட்டை – 1 துண்டு, கிராம்பு – 3, ஏலக்காய் – 5, பச்சை மிளகாய் – 7, எலுமிச்சைச் சாறு – 1 ஸ்பூன், மிளகாய்த் தூள் – அரை ஸ்பூன், புதினா, கொத்தமல்லி, உப்பு – சிறிதளவு

செய்முறை

காலிஃபிளவரை சுத்தம் செய்து கொள்ளவும். அரிசியை 1 மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும். முந்திரிப் பருப்புடன், ஏலக்காய், பட்டை, கிராம்பு சேர்த்து விழுதாக அரைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, வெங்காயம், பச்சை மிளகாய், அரைத்த விழுது ஆகியவற்றை சேர்த்து வதக்கவும். பின்னர் இஞ்சி, பூண்டு விழுது, தயிர், தக்காளி, மிளகாய்த் தூள், உப்பு சேர்த்து கிளறவும்.

பின்னர் காலிஃப்ளவர் துண்டுகள், புதினா, கொத்தமல்லி சேர்த்து கிளறவும். அதனுடன் 4 கப் தண்ணீர், எலுமிச்சைச் சாறு சேர்த்து, ஒரு கொதி வந்ததும் அரிசியை சேர்க்கவும்.

அரை வேக்காடு பதம் வெந்ததும், நெய் சேர்த்து கிளறி மூடவும். அதன் மேல் சுடு தண்ணீர் பாத்திரத்தை வைத்து, தம் செய்து, அடுப்பை சிம்மில் 5 நிமிடம் வைத்து அணைக்கவும். பின்னர் அடுப்பில் இருந்து இறக்கி பரிமாறவும். சுவையான இந்த காலிஃபிளவர் பிரியாணியை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள். ■

கீரை இல்லா சமையல் வேண்டாம்...

காய்கறிகள் வாங்கச் செல்லும் நம்மை முதலில் இழுப்பது பச்சைப் பசேல் கீரைகள் தான். கீரை வளர்ப்பது மிக எளிது. மிகக் குறுகிய காலத்தில் அறுவடை செய்து விற்பனை செய்து விடலாம். கீரைகளை நம் வீட்டிலேயே எளிதில் வளர்க்கலாம். நமது அன்றாட உணவில் கீரை சேர்த்துக் கொள்வது நம் உடலுக்கு மிகவும் நன்மையைத் தரும். கீரைகளை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து இப்போது காணலாம்.

அரைக் கீரை

இரத்தத்தை உற்பத்தி செய்யும், கபத்தை உடைத்து வெளியேற்றும், வாத நோய் தணிக்கும்.

அகத்திக் கீரை

பித்தம் குணமாகும். ஜீரண சக்தியை உண்டு பண்ணும், இழந்த பலத்தை மீட்டுத் தரும். மலத்தை இளக்கி வெளியேற்றும். வைட்டமின் ஏ மற்றும் கால்சியம் அதிக அளவில் இருப்பதால் உடல் வளர்ச்சியும், கண் பார்வை தெளிவும், எலும்பு பலமும் கிடைக்கும்.

பொன்னாங்கண்ணி கீரை

மேனி பிரகாசிக்கும். தினசரி இந்தக் கீரையை சூப் வைத்து அருந்தினால் உடல் வலு பெறும்.

மணத்தக்காளி கீரை

குடல் புண், வாய்ப்புண் போன்றவற்றை ஆற்றும். சின்ன வெங்காயத்துடன் இந்தக் கீரையை சேர்த்து, சமைத்து சாப்பிட்டால் புண்கள் விரைவில் ஆறும். ■

மழைக்கால நோய்களைத் தடுக்கும் முறைகள்

கோடை வெயில் முடிந்து தற்போது ஆங்காங்கே மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனிடையே மழைக்கால நோய்களும் மக்களைத் தாக்கத் தொடங்கிவிடும். கொசுக்களால்தான் அதிக அளவு நோய்கள் ஏற்படுகின்றன. சுகாதாரமாக இருந்தால் இப்பிரச்சனையைத் தவிர்க்கலாம். ஆனால் நோய் வந்து விட்ட பிறகு என்ன செய்வது என்பதைப் பார்ப்போம்.

மலேரியா

காய்ச்சல், நடுக்கம், தசைவலி மற்றும் சோர்வு ஆகியவைகள் மலேரியாவின் அறிகுறிகளாகும். மலேரியா காய்ச்சல் பெண் அனாஃபிலிஸ் என்ற கொசுக்களால் ஏற்படுகிறது. இவ்வகை கொசுக்கள் தண்ணீர் தேங்கியிருக்கும் இடத்தில் இனப்பெருக்க மாகும்.

டெங்கு

இந்தக் காய்ச்சலும் கொசுக்களால் ஏற்படுவதுதான், இக்காய்ச்சல் வந்தால் உடல் வலி, மூட்டு வலி மற்றும் தடிப்புகள் போன்றவை உண்டாகும். நோய் வருவதற்கான முக்கிய காரணம் டைகர் கொசுக்கள்தான். இந்தக் கொசுக்கள் வராமல் தடுப்பதற்கு பூச்சி விலக்கிகளைப் பயன்படுத்த வேண்டும்.

சிக்கன் குனியா

ஏடிஸ் கொசுக்கள் கடிப்பதால் வருவது சிக்கன் குனியாவாகும். திடீரென வரும் காய்ச்சலோடு சேர்ந்து கடுமையான மூட்டு வலி இருக்கும். ஏடிஸ் கொசுக்கள் வீட்டில் வைத்திருக்கும் தண்ணீரில்தான் அதிக இனப்பெருக்கம் செய்யும். இந்தக் கொசுக்கள் பகல் நேரத்தில் கடிக்கும். இதனைத் தடுக்க தண்ணீர் தொட்டிகளை சுத்தப்படுத்தி, கொசுக்களை அழிக்கும் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

டைபாய்டு

டைபாய்டு என்ற நோய், தண்ணீரினால் வருவதாகும். டைபாய்டு வரக் காரணமாக இருப்பது எஸ்டைஃபி என்ற பாக்டீரியா, அசுத்தமான உணவு மற்றும் தண்ணீரை உபயோகிப்பதால் இந்நோய் ஏற்படுகிறது. மேலும் சுகாதார சீர்கேடினாலும் உருவாகும். காய்ச்சல், தலைவலி, சோர்வு, வலி மற்றும் தொண்டைப்புண் ஆகிய அறிகுறிகள் டைபாய்டிற்கான அறிகுறிகள்.

வயிற்றுப் போக்கு

மழைக்காலத்தில் எளிதில் தாக்கும் நோய்களில் வயிற்றுப் போக்கும் ஒன்றாகும். வயிற்றுப் போக்கு ஏற்படும் போது, உடலில் உள்ள நீர்ச்சத்து அதிக அளவில் வெளியேறும். இதன் காரணமாக நடக்க முடியாமை, உடல் சோர்வு போன்றவை ஏற்படும். இந்நோய் ஏற்பட்டால் காலதாமதமின்றி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெறுவது அவசியம். வயிற்றுப் போக்கு பெரும்பாலும் சுகாதாரமற்ற உணவு மற்றும் தண்ணீரால் ஏற்படுகிறது. வயிற்றுப் போக்கில் அக்யூட் டையரியா மற்றும் குரோனிக் டையரியா என இரண்டு வகை உள்ளன. வயிற்றுப் போக்கை வரும் முன் தடுக்க முதலில் சுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன் கைகளை நன்கு கழுவ வேண்டும். வெந்நீரைக் குடிப்பது நல்லது.

மஞ்சள் காமாலை

மஞ்சள் காமாலையை ஏற்படுத்தும் கிருமிகள் சுத்தமில்லாத உணவுகள் மற்றும் தண்ணீரின் மூலம் வருகிறது. சோர்வு, மஞ்சள் நிற சிறுநீர், வாந்தி மற்றும் ஈரல் செயல் பிறழ்ச்சி போன்றவை மஞ்சள் காமாலையின் அறிகுறிகள். இந்நோயைத் தடுக்க கொதிக்க வைத்த தண்ணீரைக் குடிக்க வேண்டும். சத்தான பானங்களை அதிகம் குடிக்க வேண்டும். ■

தையல் தொழில் மூலம் வாழ்வாதார வளர்ச்சி

என் பெயர் உமா, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டாரம், காரியாப்பட்டினம் ஊராட்சி புல்வேலி குக்கிராமத்தில் வசித்து வரும் நான் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் ஊக்குனராக இருக்கிறேன். பத்தாம் வகுப்பு முடித்து விட்டு, வீட்டிலிருந்தபடியே நான், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் எங்கள் கிராமத்தில் பணியாற்றி வந்தேன்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் MGNREGS Project Life திட்டத்தின் IOB RSETI மூலம் 30 நாட்கள் நடத்தப்பட்ட தையல் பயிற்சியில் இணைந்து நான் தையல் கற்றுக் கொண்டேன். பின்பு ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் உட்கடன் பெற்று, தையல் இயந்திரம் வாங்கி, ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் கடன் பெற்று, காரியாப்பட்டினம் ஊராட்சியில் கடை ஒன்றினை வாடகைக்கு எடுத்து, தையலகம் நடத்தி வருகிறேன்.

தற்போது எனது தையலகத்தில் மூன்று நபர்கள் பணியாற்றி வருகின்றனர். பிரதி மாதம் கடை வாடகை மற்றும் இதர செலவுகள் போக மாதம் ரூ. 7,000/– வரை எனக்கு இலாபம் கிடைக்கிறது. இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி. ■

– உமா, புல்வேலி கிராமம், நாகப்பட்டினம் மாவட்டம்.

மாற்றுத் திறனாளிக்கு வாழ்வாதாரம் தந்த இயக்கம்

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் வட்டாரம், பெருந்தலையூர் ஊராட்சியில் உள்ள மேற்குக் குட்டிப்பாளையம் என்ற குக்கிராமத்தில் வசித்து வரும் திரு. சக்திவேல், வயது 42 (த/பெ. ஆறுமுகம்), சிறு வயதிலேயே இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி. மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இவர் இப்பகுதியில் உள்ள புதிய கீதம் மாற்றுத் திறனாளிகள் சிறப்புக் குழுவில் உறுப்பினராக உள்ளார். இந்தக் குழுவில் 6 மாற்றுத் திறனாளிகள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் இக்குழுவிற்கு ரூ. 15,000/– ஆதார நிதியாகவும், கோபி கிளை கார்ப்பரேஷன் வங்கி மூலம் நேரடிக் கடனாக ரூ. 50,000/–மும் வழங்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் உறுப்பினரான சக்திவேல் நலிவுற்றோர் நிதியாக தனிநபர் கடன் ரூ. 15,000/– பெற்று திருப்பிச் செலுத்தி வருகிறார். மாற்றுத் திறனாளியாகிய சக்திவேல், தன்னுடைய அன்றாடத் தேவைகளுக்குக் கூட மற்றவர்களை சார்ந்து வாழ வேண்டி இருந்தது. தனக்கு மூன்று சக்கர வாகனம் வேண்டி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாகவும், சிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலமாகவும், சமுதாய மாற்றுத் திறனாளி ஊக்குநரின் வழிகாட்டுதலின்படி விண்ணப்பம் செய்திருந்தார்.

இவரின் விண்ணப்பத்தினை ஏற்றுக் கொண்டு, ஈரோடு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் மூலம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டது. இதன் மூலம் தற்போது சக்திவேல் தனியாகவே வெளியில் சென்று தன்னுடைய அன்றாட வேலைகளை தானே செய்து கொள்கிறார். சமுதாயத்தில் மற்றவர்களைப் போல் தானும் நடமாட மூன்று சக்கர சைக்கிள் பெற்றிட உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு சக்திவேல் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

முயற்சியை விடாத தனலட்சுமி வெற்றி குழு

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், அயிப்பேடு ஊராட்சி, வேலந்தாங்கல் கண்டிகை கிராமத்தில் தனலட்சுமி மகளிர் சுய உதவிக் குழு கடந்த 2009ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 15 உறுப்பினர்களும் தங்களது சேமிப்புத் தொகையை தவறாது குழுவில் செலுத்தி விடுகின்றனர். இக்குழுவிற்கு 2011ஆம் ஆண்டு சுழல் நிதியாக ரூ. 60 ஆயிரம் வழங்கப்பட்டது. பின்னர் 2015ஆம் ஆண்டு இக்குழு தர மதிப்பீடு செய்யப்பட்டது.

இக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் நிலத்தில் அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து, கனகாம்பரப் பூச்செடிகளை நட்டு வளர்த்து வந்தனர். போதுமான தண்ணீர் வசதி இல்லாததால் சரியான இலாபம் கிடைக்கவில்லை. இருப்பினும் வங்கிக் கடனை கட்டி முடித்தனர்.

இதைத் தொடர்ந்து 20.03.2017 அன்று நேரடிக் கடனாக ரூ. 2,40,000/- பெற்று, செங்கல் சூளை வைத்தனர். இதன் மூலம் இலாபமாக ரூ. 60 ஆயிரம் கிடைத்தது. இருப்பினும் போதிய அளவு தண்ணீர் கிடைக்காததால், செங்கல் சூளை அமைப்பதற்காக பெற்ற கடன் தொகை ரூ. 2,40,000/- மற்றும் இலாபத் தொகை ரூ. 60 ஆயிரம் என மொத்தம் ரூ. 3 இலட்சத்தை குழுவின் 15 உறுப்பினர்களுக்கும் தலா ரூ. 20 ஆயிரம் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இந்தத் தொகையைப் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் கறவை மாடுகள் வாங்கி, வளர்த்து, பாலை கறந்து சோளிங்கர் பால் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு உறுப்பினர்களும் தினசரி 8 லிட்டர் வரை பாலை விற்பனை செய்து வருவதன் மூலம் தினம் ரூ. 200/- வரை வருவாய் பெறுகின்றனர். இந்தத் தொகையைக் கொண்டு தங்களது வாழ்வாதாரத்தை பெருக்குவதுடன், வங்கிக் கடனையும் திரும்பச் செலுத்தி வருகின்றனர். தங்களுக்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர் தனலட்சுமி சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள். ■

முயன்றால் கனவுகள் மெய்படும்...

வருடத்திற்கு 100 நாட்கள் மட்டும் அல்ல, வருடம் முழுவதும் வாழ்வாதாரம் பெற்றுத் தந்த மகளிர் திட்டம் குறித்து, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கீழ் பென்னாத்தூர் ஒன்றியம், ஐங்குளம் ஊராட்சியைச் சார்ந்த செல்வி. எஸ். சிவசக்தி கூறுகையில், 'ஏழை விவசாய குடும்பத்தைச் சார்ந்த நான், இரு சகோதரிகளுடன் பிறந்துள்ளேன். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, எனது பெற்றோர் மிகவும் கடினமான சூழ்நிலையிலும் பொறியியல் இளநிலை பட்டம் பெறும் அளவிற்கு என்னைப் படிக்க வைத்தனர். மேற்கொண்டு பயில இயலாத சூழ்நிலையில் ஒரு வருட காலமாக வேலை வாய்ப்பின்றி இருந்தேன். அந்த சமயத்தில் எங்களது கிராமத்தில் செயல்படும் அன்னை மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் MGNREGS திட்டத்தில் 100 நாள் வேலை பெற்ற குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சியான Project LIFE (Wages Employment) திட்டத்தின் மூலம் Tally படிக்க வாய்ப்பு கிடைத்தது.

மேலும் கல்லூரியில் பயிலும் போது, பெரிய கணினி நிறுவனங்கள் என்பது ஒரு கனவாக மட்டுமே இருந்தது. ஆனால் இத்திட்டத்தின் மூலம் எனது கனவு நிறைவேறியது. Wipro போன்ற பெரும் நிறுவனங்களில் பணிபுரிவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கிறது. தற்பொழுது மாத சம்பளமாக ரூ. 12,000/- பெறுகிறேன். எனது குடும்பத்தின் தேவைகளுக்கும், எனது சகோதரிகளின் படிப்பு செலவிற்கும் எனது ஊதியம் பெரிதும் துணையாக இருக்கிறது.

என்னைப் போன்று பிறருக்கும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் Project LIFE திட்டமானது ஒரு வரப்பிரசாதம் என்பதனைக் கூறி, அவர்களையும் பயனடையச் செய்கிறேன். மேலும் எனது வாழ்க்கைக்கு புது ஊக்கம் அளித்த மகளிர் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றியினை பெரும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்' என்கிறார் செல்வி. சிவசக்தி. ■

வாழ்வாதார இயக்கத்தால் அடையாளம் கிடைத்தது

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடை மருதூர் வட்டாரம், கோவிந்தாபுரம் களப்பகுதி, திருவிசநல்லூர் ஊராட்சியில் வசித்து வரும் திரு. செந்தில்குமார் (வயது 40), பிறவியிலேயே போலியோ நோயால் தாக்கப்பட்டு இரண்டு கால்களும் ஊனமுற்றவர். இவருக்கு திருமணமாகி மனைவியும், இரு குழந்தைகளும் உள்ளனர். 8ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள இவர், மாற்றுத் திறனாளி என்பதால் மிகவும் சிரமப்பட்டு வந்தார். மிகவும் வறுமையான குடும்பந்தைச் சேர்ந்த இவர் கிடைத்த வேலையை செய்து தனது குடும்பத்துடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் இவர் வசித்த ஊரில் ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்பாட்டிற்கு வந்தது. இப்பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மாற்றுத் திறனாளி பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செந்தில்குமார் வைகறை சுய உதவிக் குழுவில் உறுப்பினராகவும் இருந்தார். வாழ்வாதார இயக்கம் மூலம் இவருக்கு தேசிய மாற்றுத் திறனாளி அடையாள அட்டை மற்றும் மாதாந்திர உதவித் தொகை போன்றவை பெற்றுத் தரப்பட்டது. இதுமட்டுமின்றி இலக்கு மக்கள் முன்னுரிமை அடிப்படையில் தனிநபர் கடனாக ரூ. 15,000/- பெற்ற செந்தில்குமார், தன் வீட்டின் அருகில் சிறிய பெட்டிக்கடை வைத்தார்.

தற்போது அந்தக் கடை மூலம் தினசரி கணிசமான அளவு வருவாய் பெற்று வரும் இவர், தனது கடனையும் சிறுக சிறுக திரும்பச் செலுத்தியுள்ளார். வைகறை சுய உதவிக் குழு திருவிசநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ளது என்று கூறிய செந்தில்குமார், தற்போது வாழ்வாதார இயக்கம் மூலம் தானும் மற்றும் தனது குடும்பத்தினரும் வறுமை நீங்கி மகிழ்ச்சியாக வாழ்ந்து வருவதாகக் கூறி, வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

தினம்... தினம்...

சர்வதேச இளைஞர்கள் தினம் (ஆகஸ்ட் 12)

ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியை சர்வதேச இளைஞர்கள் தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது. அதன்படி 2000ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியன்று சர்வதேச இளைஞர்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

உலக சமூகத்தில் இளைஞர்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதும், தத்தமது சமூகங்களுக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் வகையில் அவர்களது செயல்பாடுகளை ஊக்குவிப்பதும் சர்வதேச இளைஞர்கள் தினத்தைக் கடைப்பிடிப்பதன் நோக்கமாகும்.

15 வயது முதல் 24 வயது வரையிலான பிரிவினரை இளைஞர்கள் என்று ஐ.நா. சபை வலியுறுத்துகிறது. உலக மக்கள் தொகையில் இந்தப் பிரிவினர் கணிசமான அளவில் உள்ளனர். வளர்ந்து வரும் நாடுகளில் இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

உலக மனிதநேய தினம் (ஆகஸ்ட் 19)

சர்வதேச அளவில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 19ஆம் தேதி உலக மனிதநேய தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. போர், நோய், சத்துக் குறைவு, இயற்கை பாதிப்பு போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவு கூருவதற்கும், இதுபோன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்பவர்களை கௌரவிக்கும் தினமாகவும் உருவாக்கப்பட்டதுதான் உலக மனிதநேய தினம்.

ஐக்கிய நாடுகள் சபையால் 2008ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இத்தினம், 2009ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நாடு மற்றும் வீட்டைத் துறந்து, ஆதரவற்றோர்களுக்கு உதவி மற்றும் சேவை செய்பவர்கள் மனிதநேயப் பணியாளர்கள் எனப்படுகின்றனர். இந்தத் தினத்தை உலக நாடுகள் சபையும், அரசு சார்பற்ற நிறுவனங்களும், மனிதநேய அமைப்புகளும் இணைந்து உலகளவில் அனுசரித்து வருகின்றனர்.

மனிதநேயம் என்பது மனித வாழ்க்கையில் மிக உத்தமமான ஓர் உணர்வு, இந்த உணர்வை இன்றைய தினத்தில் நம்முள் நுழைத்து, நாமும் மனிதர்களாக மாற உறுதிமொழி எடுப்போம். ■

தேசிய விளையாட்டு தினம் (ஆகஸ்ட் 29)



நம் இந்திய நாட்டுக்காக ஹாக்கி விளையாடிய திரு. தயான்சந்த் என்பவரின் பிறந்த தினமான ஆகஸ்ட் 29ஆம் தேதியே தேசிய விளையாட்டு தினமாக நம் நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உத்திரபிரதேச மாநிலம், அலகாபாத் நகரில் 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி திரு. தயான்சந்த் பிறந்தார். இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து வந்த இவரின் தந்தையார், இராணுவ ஹாக்கி அணிக்காக விளையாடியிருக்கிறார். 1922ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த திரு. தயான்சந்தும் இராணுவ ஹாக்கி அணியில் விளையாடியிருக்கிறார். பின்னர் 1934ஆம் ஆண்டு இந்திய ஹாக்கி அணியின் கேப்டனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இவரது தலைமையில் இந்திய ஹாக்கி அணி, 1928 (ஆம்ஸ்டர்டாம்), 1932 (லாஸ் ஏஞ்சல்ஸ்), 1936 (பெர்லின்) ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றது. ஹாக்கி விளையாட்டில் 1000 கோல்களுக்கு மேல் அடித்த இவருக்கு 1956ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மபூஷண் விருது வழங்கி சிறப்பித்தது. ஹாக்கி வீரர் ஒருவர் இந்த விருதைப் பெருவது இதுவே முதல் முறை.

இவர் 1952ஆம் ஆண்டு 'கோல்' என்ற பெயரில் சுய சரிதை எழுதினார். பல்வேறு சிறப்புகளையும் பெற்ற திரு. தயான்சந்த், 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் தேதி மறைந்தார். ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்.
திருவண்ணாமலை - 606 604.

அலுவலகம் : (04175) : 233333
இல்லம் : (04175) : 233366
பேக்ஸ் : (04175) : 232222

என் அன்பிற்குரிய மாணவச் செல்வமே!

நான் உன்னுடன் உனக்குத் தெரியாத ஒரு கருத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நமது தேசபிதா மகாத்மா காந்தி நமது நாடு சுதந்திரம் பெற ஆற்றிய அரும்பெரும் பணிகள் பற்றி நான் உனக்கு விளக்கிடத் தேவையில்லை.

ஆனால் அனைத்து நலன்களை விடவும் பெரியதான ஒன்றாக அவர் எதைக் கருதினார் என உனக்கு நான் சொன்னால் அதைக் கேட்டு நீ ஆச்சரியப்படுவாய்! ஆம், சுகாதாரத்தைத் தான் அவர் அனைத்து நலன்களை விடவும் மேலானதாகப் போற்றினார்.

நமது தேசபிதா தனது வீடு மற்றும் ஆசிரமத்தில் தான் பயன்படுத்திய கழிவறையைத் தானே தினமும் நன்கு சுத்தம் செய்து பராமரித்தார் என்பது வியப்பளிப்பதாகும்.

அவர் தனது பரபரப்பான வாழ்க்கைக்கு இடையேயும் இவ்வழக்கத்தை கடைசி வரை கடைபிடித்தார் என்பது மிகையல்ல. தெய்வ பக்திக்கு அடுத்த நிலையில் சுகாதாரத்தையே அவர் போற்றினார்.

நமது வீட்டு வரவேற்பறை எவ்வளவு சுத்தமானதாக உள்ளதோ அதே போல நாம் பயன்படுத்தும் கழிவறையும் சுத்தமானதாக இருக்க வேண்டும் என அவர் அடிக்கடி வலியுறுத்தி கூறுவார்.

சுத்தமாகவும் சுகாதாரமாகவும் உள்ள கிராமமே தனது இலட்சியமான கிராமம் ஆகும் என அவர் முழங்கினார்.

(திருப்புக)

நமது தேசபிதாவின் மேற்கண்ட இலட்சியத்தினை நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள உனது கிராமத்திலும் உனது வீட்டிலும் உன்னுடைய பங்களிப்புடன் நான் நிறைவேற்ற விரும்புகிறேன்.

- உன் வீட்டில் கழிப்பறை இல்லையா? அப்படியெனில் உடனே நீ உன் பெற்றோரிடம் அடம்பிடித்து உன் வீட்டில் ஒரு கழிப்பறையைக் கட்ட வைக்கலாமே! இதற்காக அரசாங்கம் தரும் சலுகைத் தொகை ரூ. 12,000/-ஐ உன் பெற்றோர் பயன்படுத்திக் கொள்ளலாமே!

- உன் வீட்டில் கழிப்பறை கட்டி நீயும் உன் வீட்டில் உள்ள அனைவரையும் கழிப்பறையை தொடர்ந்து பயன்படுத்திடச் செய்யலாமே!

- நீ பள்ளியில் உள்ள நேரங்களில் பள்ளியில் உள்ள கழிப்பறையையே கட்டாயமாகப் பயன்படுத்திடக் கேட்டுக் கொள்கிறேன். பள்ளியைச் சுற்றி மலஜலம் கழித்து பள்ளியின் சுற்றுப்புறத்தை அசுத்தம் செய்யாமல் இருக்கலாமே!

- நீ உனது கிராம சுற்றுப்புறத்தினை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இனி, நீ உனது கிராமத்தில் உள்ள ஏரி, குளம், வயல்வெளி மற்றும் திறந்த வெளியில் மலஜலம் கழித்து அசுத்தம் செய்ய மாட்டாய் உறுதியாக என நம்புகிறேன்.

- நீ உன் அக்கம் பக்கத்தாரிடம் கழிப்பறை பயன்பாடு மற்றும் சுகாதாரம் பேணுவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்து அவர்களும் கழிப்பறையை பயன்படுத்துமாறு செய்தால் அது உனது மாபெரும் வெற்றியாகும்.

உன் மீதுள்ள நம்பிக்கையில் நான் இத்துடன் ஓர் உறுதிமொழியை அனுப்பியுள்ளேன். நீ அந்த உறுதி மொழியை ஆசிரியர் முன்னிலையில் வாசித்து உறுதிமொழி ஏற்று அதில் **“நான் செய்வேன்”** என உன் கைப்பட எழுதி கையொப்பம் இட்டு எனக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த இயக்கத்தில் நீ **“குட்டி கமேண்டோ”** ஆக உதவிட விரும்பினால் அதனை உன் ஆசிரியரிடம் தெரிவிப்பாயாக. அவர் வட்டார வளர்ச்சி அலுவலரைத் தொடர்பு கொண்டு ஆவண செய்வார்.

மேலும் நமது மாவட்டத்தை **“தூய்மை திருவண்ணாமலை”** மாவட்டமாக மாற்றிட உனது ஆலோசனைகள் ஏதும் இருப்பின் நேரடியாக எனக்கு அனுப்பி வைக்கலாமே! சிறந்த ஆலோசனைகளுக்கு நான் நேரடியாக பரிசு வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீ உன் வாழ்வில் உயர்வு பெற நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்கிட இரண்டு நாள் கருத்தரங்கு

2017 ஜூன் 29 மற்றும் 30, முசூரி, உத்ரகாண்ட் மாநிலம்.

நிலைத்த மற்றும் நீடித்த திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்கிட 2017ம் ஆண்டு ஜூன் 29 மற்றும் 30 அன்று முசூரி, உத்ரகாண்ட் மாநிலத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த கருத்தரங்கின் ஒரு பகுதியாக 2015ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணிக்கு வந்த உதவி ஆட்சியாளர்களும் (பயிற்சி) கலந்து கொண்டனர். அப்பொழுது, தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக ஏற்படுத்தப்பட்டு வரும் சமூக சுகாதார அணுகுமுறையில் மக்களிடையே மனமாற்றம் கொண்டிருப்பதைக் குறித்து கோயம்புத்தூர் மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி பிரியங்கா, இ.ஆ.ப., அவர்கள் பகிர்ந்து கொண்டார்.

குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'குட்டி கமாண்டோஸ்' (Kutty Commandos) என்ற சுகாதார சிறார் இயக்கத்தின் வெற்றியைப் பகிர்ந்து கொண்டார்.

இந்திய அரசின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துறை செயலாளர் திரு. பரமேஸ்வரன் ஐயர், இ.ஆ.ப., அவர்களிடமிருந்து கோயம்புத்தூர் உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி பிரியங்கா இ.ஆ.ப., அவர்கள் பரிசு பெற்றார்.

களப்பணியின் குரல்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டம், தேவராபுரம் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டத்தில் சுகாதார ஊக்குநருக்கு சிறந்த பணிக்கான பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது. நாள் : 01.05.2017

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த நூறு சுகாதார ஊக்குநர்களுக்கு 02.05.2017ல் இருந்து 06.05.2017 வரை மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் சமூக அணுகுமுறையிலான பயிற்சி திரு. அஜய் சின்ஹா அவர்களால் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து பங்கேற்ற ஊக்குநர்களுக்கு களப்பணி செயல்முறை விளக்கம் 04.05.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் வழங்கப்பட்டது.

ஆந்திர பிரதேசம், காளஹஸ்தி மண்டலத்தில் இருந்து தமிழ்நாடு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தைப் பார்வையிட, 05.05.2017 அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு வந்திருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஊக்குநர்களுக்கு, சமூக சுகாதார அணுகுமுறைகளான பயிற்சியின் ஒரு அங்கமாக, காலை பின் தொடர்வு 04.05.2017 அன்று மேற்கொள்ளப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்ட ஊக்குநர்களுக்கு 02.05.2017ல் இருந்து 06.05.2017 வரை நடந்த சமூக சுகாதார அணுகுமுறையிலான பயிற்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் திரு. லட்சுமிபதி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

களப்பணியின் குரல்கள்



தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் வட்டம், கலியாவூர் ஊராட்சி, உலக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார தகவல் அடங்கிய புறநோயாளிகள் மருந்துச் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. நாள்: 04.05.2017

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தில் சுகாதார ஊக்குநர்கள் உறிஞ்சுக் குழி கழிப்பறையில் மாதிரி வரைபடம் வரைந்து, செயல்முறை விளக்கம் 13.05.2017 அன்று மேற்கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம் மற்றும் மாத்தூர் வட்டம் அலுவலக மையத்தில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு 17.05.2017 அன்று சுகாதாரம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானத்தை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்கள் 17.05.2017 அன்று பார்வையிட்டார்.

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், மேலப்பாலம் புதூர் ஊராட்சியில் அமைந்துள்ள மண்புழு உரம் தயாரித்தல் முறையை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்கள் 23.05.2017 அன்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எலகிரி ஊராட்சியில் சுகாதார ஊக்குநர் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுமான தொழில் நுட்பத்தை 15.05.2017 அன்று சரிபார்த்தனர்.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களை நல்ல முறையில் உபசரிக்கும் நாம், மலம் கழிக்கும் விஷயத்தில் மட்டும் அலட்சியம் காட்டுகிறோம். வீட்டில் கழிவறையைக் கட்டாததால், மலம் கழிக்க திறந்தவெளிக்குப் போகுமாறு சொல்லி, அவர்களை அவமானப் படுத்துவது மட்டுமல்ல. திறந்தவெளி மலத்தால் பரவும் நோய்கள் அவர்களுக்குப் பரவ நாமே காரணமாகிறோம். வீட்டில் கழிவறை கட்டுங்கள். ஆரோக்கியத்தையும், கவுரவத்தையும் நிலை நாட்டுங்கள்.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்.

unicef
unite for children

வெளியில மலம் போனா சீச்சீ சொல்லப்பா!

கழிப்பறையின் அவசியம் என்ன ?

ஒரு மனிதன் உயிர் வாழ, அவனது உடலில் ஏற்படும் கழிவுகள் வெளியேற்ற உடல் உறுப்புகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு வீட்டிற்கு கழிப்பறை. கழிப்பறையின் அவசியம் என்ன என்பது குறித்து எனது சொந்த வாழ்வில் நடந்த நிகழ்வுகளை உங்களுடன் இக்கட்டுரையில் பகிர்கிறேன்.

தென் தமிழகத்தின் கடைக்கோடி மாவட்டமான தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், ஆறுமுக மங்கலம் ஊராட்சியில் வசித்து வருபவள் நான். கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு, பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் காதல் திருமணம் செய்து, எனது கணவருடன் ஊர் மக்கள் மத்தியில் வெற்றிகரமாக வாழ வேண்டும் என்று தன்னம்பிக்கையுடன் தனிக்குடித்தனம் நடத்த வந்த எனக்கு பேரதிர்ச்சி. நான் குடியேறிய வீட்டுக்குக் கழிப்பறை கிடையாது.

காதல் திருமணம் செய்ததால் உறவினர்கள் வீட்டு கழிப்பறையையும் பயன்படுத்த முடியாத நிலை. உடனடியாக கழிப்பறை கட்டவும் வசதியில்லை. தினம் தினம் இயற்கை உபாதைகளை பெரும் இன்னலாக அமைந்தது. நானும் பல்வேறு சிறு சிறு நோய்களுக்கு ஆட்பட்டேன். வாழ்வதே போராட்டமாக இருந்தது. ஊரில் ஒவ்வொருவரையும் பார்க்கவும், வெளியில் செல்லவும் மிகவும் வெட்கப்பட்டு முடங்கிக் கிடந்தேன்.

அப்போதுதான் விடிவெள்ளியாக எங்கள் ஊர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் “கழிப்பறை கட்ட விண்ணப்பங்கள் சேகரிக்க வேண்டும், அதற்கு அரசாங்கம் ஊக்கத் தொகை தர உள்ளது’’ என்றனர். நான் பட்ட துயரை எந்தப் பெண்ணும்படக் கூடாது என்பதற்காக அப்பொறுப்பினை நாமே ஏற்போம் என உறுதி எடுத்தேன். முதல் விண்ணப்பமாக நானே வழங்கிய ஊக்கத் தொகையுடன், ரூ. 12,000/– மதிப்பீட்டில் கழிப்பறை கட்டினேன். வீடு வீடாகச் சென்று ஊராட்சியின் அனைத்து வீடுகளிலும் விண்ணப்பங்கள் பெற்று, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் சமர்ப்பித்துள்ளேன். பணிகள் நடைபெற்று வருகிறது. எங்கள் ஊராட்சி முழு சுகாதார ஊராட்சியாக விரைவில் மலரும். அதில் எனது பங்கும் உண்டு என்பதில் மகிழ்ச்சி.

ஒரு வீட்டில் பூஜை அறை, சமையல் அறை என தனித்தனியாக எந்த அறை இல்லாவிட்டாலும், இருக்கின்ற இடத்தில் அனுசரித்து குடும்பம் நடத்தலாம். ஆனால் கழிப்பறை என்ற ஒன்று தனியாக இல்லாமல் குடும்பம் நடத்துவது நரகத்தில் வாழ்வதற்கு சமம். சுருக்கமாகக் கூறினால் ‘கழிப்பறை இல்லா வீடு, மகிழ்ச்சி என்னும் கடவுள் இல்லா வீடு’’.

– பி. சங்கரேஸ்வரி, க/பெ. என். பாலகிருஷ்ணன்,
ஆயிரத்தெண் விநாயகர் மகளிர் குழு,
180–ஏ, தோப்பச்சி அம்மன் கோவில் தெரு,
ஆறுமுக மங்கலம் (அ), திருவைகுண்டம் (தா),
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி எண். 98656 93505

unicef for every child

முழு சுகாதாரம் தமிழுகம் முன்னோடி தமிழுகம்

சுகாதார அனுகுமுறைகள் பற்றிய பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கான பயிற்சி 13.06.2017 முதல் 17.06.2017 வரை

STATE INSTITUTE OF RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ

RD & PR Department, Government of Tamil Nadu, Maraimalai Nagar – 603 209.

unicef unite for children

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் சுகாதார அனுகுமுறைகள் பற்றிய பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கான பயிற்சி 02.05.2017 முதல் 06.05.2017 வரை

STATE INSTITUTE OF RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ

RD & PR Department, Government of Tamil Nadu, Maraimalai Nagar – 603 209.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. எல். ராஜா,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

திட்டத்தின் செயல்பாடுகளை இணையதளம் மூலம் கைப்பேசி செயலி பயன்படுத்துதல்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி மூலம் உள்ளீடு செய்து, அனைத்துத் தகவல் களையும் தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து உடனடியாகத் தெரிந்து கொள்வதற்காக, 26.06.2017 அன்று முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களால் கைப்பேசி செயலி பயன்பாடு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா, மத்திய திட்ட மேலாண்மை அலகின் மேலாளர்கள், மாவட்டச் செயலாக்க அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து திட்டத்தின் விவரங்களை இந்த பயன்பாட்டில் உள்ளீடு செய்யும் பொருட்டு, திட்டப் பணியாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி அந்தந்த மாவட்டங்களில் நடத்தப்பட்டது.

இந்த மென்பொருள் மூலம் ஒவ்வொரு களப் பணியாளர்களும் திட்டப் பணிகளின் செயல்பாட்டை களத்தில் இருந்து கைப்பேசி வழியாக பதிவு செய்வதன் மூலம் மேல்நிலை அலுவலர்கள் இணையதளம் வழியாக உரிய விவரங்களை அறிந்து கொள்வதுடன், காகிதமில்லா கண்காணிப்பிற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் இந்திய ஆய்வுக் குழுவினர் மற்றும் பிற திட்டங்களுக்குத் திட்டங்களை, செயல்பாடுகளை தெரிவிக்க ஏதுவாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ■

வாழ்வாதார மேம்பாடு குறித்த ஒருநாள் பயிற்சிப் பட்டறை

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் புதிய மாவட்டங்களில் பணிபுரியும் தொழில் ஆலோசகர்கள், இளம் வல்லுநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வாழ்வாதார மேம்பாடு குறித்த ஒருநாள் பயிற்சிப் பட்டறை, திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் தலைமையில் கடந்த 28.06.2017 அன்று பட்டுக்கோட்டை மங்களபானு அரங்கில் நடைபெற்றது.

திட்டத்தின் கூடுதல் இயக்குநர் அவர்கள் துவக்க உரையாக சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் சம்மந்தமாக விளக்கமும், புதிய மாவட்ட செயலாக்க அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சியின் தேவை குறித்தும் விளக்கினார்கள். முதுநிலை ஊரக நிதி மேலாளர் திரு. பத்மநாபன் அவர்கள் மகளிர் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் வங்கிகளில் கடன் இணைப்பு பெறுதல் சம்மந்தமாகவும், 2017-2018ஆம் நிதியாண்டில் மகளிர் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் கடன் இணைப்பு மற்றும் குறுந்தொழில்களின் விபரம் குறித்தும் விளக்கினார்.

மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. டி. மெர்சி கிளாரா அவர்கள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் சம்மந்தமான தகவல்கள் மற்றும் தரமான கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களை தேர்வு செய்து, சிறப்பான தொழில் கடன் திரும்ப செலுத்துதல் குறித்து விளக்கினார். கன்னியாகுமரி மாவட்ட தொழில் ஆலோசகர் திரு. ஏ. சுந்தரம் அவர்கள், குறுந்தொழில் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் செயல்பாட்டு அனுபவங்கள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் நீடித்தத் தன்மையில் வெற்றிகரமாக தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்கினார்கள். பயிற்சியின் இறுதியில் இளம் வல்லுநர் செல்வி. டி. பிருந்தா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள். வாழ்வாதார மேம்பாட்டின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகள் காண்பிக்கப்பட்டது. ■

பல்லவன் கிராம வங்கியின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல்

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கூனிமேடு மற்றும் அனுமந்தை கூட்டு வள மையப் பகுதியைச் சார்ந்த 8 பஞ்சாயத்திற்குட்பட்ட குடும்பங்களை மேம்படுத்த கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைத்து, ஏழை பெண்மணிகளுக்கு கடனுதவி அளிக்கப்பட்டது. கூட்டுப் பொறுப்புக் குழு பெண்மணிகள், கீற்று முடைதல், கறவை மாடு வளர்ப்பு, மீன் விற்பனை, பட்டுப் புடவை வியாபாரம், காய்கறி விற்பனை, இளநீர் வியாபாரம் ஆகிய பல்வேறு தொழில் புரிய, கடனுதவி பெற அலைகடல் என திரண்டு விழாவிற்கு வருகை புரிந்தனர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், கடனுதவி அளிப்பதன் நோக்கமும், பல்லவன் கிராம வங்கி குறித்தும், மேலும் இந்தியன் வங்கி நம் திட்டத்தோடு கைகோர்க்க முன் வந்துள்ளது குறித்தும், முறையான கடன் திருப்பம் மேலும் பல முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதையும் விளக்கினார். மண்டல மேலாளர்கள் அவர்கள் சேமிப்பு கணக்கின் முக்கியத்துவம் குறித்தும், PAN Card-ன் அவசியம் குறித்தும், காப்பீட்டின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தார்.

இதைத் தொடர்ந்து திட்டத்தின் கூடுதல் இயக்குநர் அவர்கள் ஏற்கனவே கடன் பெற்று திரும்ப செலுத்திய 37 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 102.50 இலட்சமும், புதிய சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 42.50 இலட்சமும் ஆக மொத்தம் 220 பயனாளிகள் கொண்ட 44 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 145.00 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. இக்கடனுதவியினை கூட்டுப் பொறுப்புக் குழு பெண்கள் புன்னகையோடு ஏற்று மகிழ்ந்தனர். அப்பெண்களின் கனவு கண்களில் தெரிய, கடனுதவி பெற்ற பின் புன்னகை முகத்தில் தெரிய, நாளைய முன்னேற்றம் நோக்கி அவர்களது பயணம் தொடங்கி, விழா தலைமையில் வாழ்த்துகள் பெற்று விடைபெற, விழா இனிதே நிறைவுற்றது. மேலும் இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. தாரா ஈஸ்வரி அவர்கள் மற்றும் பணியாளர்கள், பல்லவன் கிராம வங்கி மண்டல மேலாளர் திரு. தங்கராஜ், அனுமந்தை கிளை மேலாளர் திருமதி. சுதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

உலக ஏழைகள் தினம் கொண்டாட்டம் – சிறப்பு நிகழ்ச்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 28.06.2017 அன்று உலக ஏழைகள் தினம், திட்டம் செயல்படும் மாவட்டங்களில் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு, கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான வாழ்வாதாரக் கடனுதவி, துயர் குறைப்பு நிதி கடன்கள், தனிநபர் கடன்கள், சமையலறை காய்கறித் தோட்ட விதைகள் மற்றும் சமையலறைக் கழிவுகள் மூலம் எரிவாயு கலன் அமைப்பதற்கான கடன்கள், ஊக்க நிதி என மொத்தம் ரூ. 467 இலட்சம் 1952 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

வ. எண்	மாவட்டம்	கூட்டுப் பொறுப்புக் குழு கடன்		வங்கிக் கடன் இணைப்பு		துயர் குறைப்பு நிதி		காய்கறித் தோட்டம்		எரிவாயு கலன்		சிறப்புப் பிரிவு தனிநபர் கடன்		ஊக்க நிதி		மொத்தத் தொகை (இலட்சத்தில்)	
		நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
1	திருவள்ளூர்	0	0	101	33.00	36	1.80	0	0	0	0	0	0	0	0	137	34.8
2	காஞ்சிபுரம்	265	104.50	0	0	0	0	98	2.22	30	6.27	10	1.1	0	0	403	114.1
3	கடலூர்	27.0	124.50	551	102.15	66	3.95	0	0	0	0	0	0	0	0	887	230.6
4	கன்னியாகுமரி	0	0	155	58.02	220	15.83	54	0.12	0	0	94	13.3	2	0	525	87.5
மொத்தம்		535	229.00	807	193.17	322	21.58	152	2.34	30	6.27	104	14.4	2	0	1952	466.99

இந்த நிகழ்ச்சியில் செயல்படாமல் இருந்த சுய உதவிக் குழுக்கள் புதுப்பிக்கப்பட்டு, முதல் கடனாக வழங்கப்பட்டதும், ஏற்கனவே கடன் பெற்று, கடன் திரும்ப செலுத்தியவர்களுக்கு மறுகடன் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு தொழில் கடனுதவி, அவசர தேவைகளுக்கான துயர் குறைப்பு நிதி, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சமையலறை காய்கறித் தோட்டம் அமைக்க விதைகள் வழங்குதல் என உலக ஏழைகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ■

உதயநிலா கருவாடு கூட்டுப் பொறுப்புக் குழு

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வாணகிரி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் உதய நிலா கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் க. செல்வி, ச. வாசகி, கோ. அஞ்சம்மாள், ச. கோவிந்தம்மாள், ச. இருசம்மாள் ஆகியோர் சேர்ந்து, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் நாபின்ஸ் நிதி நிறுவனத் தின் மூலம் ரூ. 1,90,000/– கடன் பெற்று, கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் தொழிலைத் தொடங்கினர்.

தங்கள் தொழில் பற்றி உதய நிலா கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் கூறும் போது, 'நாங்கள் இதுவரை ரூ. 1,75,359/– அசலும் வட்டியும் செலுத்தியுள்ளோம். எங்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதால் மாதம் 28ந் தேதியே வங்கியில் கடன் தொகையை செலுத்தி விடுகிறோம். தற்போது இக்கடன் மூலம் எங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்து உள்ளது. முன்பு இருந்ததை விட தற்பொழுது எங்களின் வாழ்க்கைத் தரமும், பொருளாதாரமும் உயர்ந்துள்ளது. எங்களுடைய வாழ்க்கைக்கு விளக்கேற்றிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு உதய நிலா கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று குறிப்பிட்டனர். ■

சமுதாய பட்டறிவு பயணம், தஞ்சாவூர் மாவட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் தஞ்சாவூர் மாவட்டம் தம்பிக்கோட்டை வடகாடு மற்றும் தம்பிக்கோட்டை மேலக்காடு ஆகிய 2 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் என மொத்தம் 51 நபர்களை ஒருங்கிணைத்து விழுப்புரம் மாவட்டத்திற்கு சமுதாய பட்டறிவு பயணமாக அழைத்துச் செல்லப்பட்டது.

இந்த சமுதாய பட்டறிவு பயணமானது 10.05.2017 அன்று அதிகாலை 4.00 மணியளவில் புறப்பட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஆலப்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயல்படும் விதம் பற்றி மக்களுக்கு கூட்டு வள மைய ஒருங்கிணைப்பாளரால் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் செயல்படுத்தும் திட்டங்கள், குறிப்பாக துயர் குறைப்பு நிதி, காப்பீடு, பொது நிதி, கூட்டுப் பொறுப்புக் குழு கடன் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றைப் பற்றி கூட்டமைப்புத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மூலம் தகவல்களைக் கேட்டறிந்து தெளிவு பெற்றனர். ஹாலோ பிளாக் உற்பத்தி, கடன் பெற்ற விவரம், வட்டி விகிதம் மற்றும் திருப்பு செலுத்தும் முறை போன்றவற்றைக் கேட்டறிந்தனர்.

பனிச்சமேடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பார்வையிட்டனர். அதில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிக்கும் முறை, செயல்படுத்தும் முறை, பராமரிக்கும் பயனாளிகள் விவரம், கடன் பெற்ற விவரம், இலாபத்தின் தன்மை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் சமையலறைக் கழிவிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன் பார்வையிடப்பட்டு பயணம் நிறைவு செய்யப்பட்டது. இந்த சமுதாயப் பட்டறிவு பயணமானது தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். ■

புதிய ஆறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் – ஒரு பார்வை

திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 17.03.2017லிருந்து துவங்கிட அரசாணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களுக்குப் பட்டுக்கோட்டையிலும், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்த்து தூத்துக்குடியிலும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மணமேல்குடியிலும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரக வளாகத்திலும் மாவட்டச் செயலாக்க அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன.

முதற்கட்டமாக திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள 129 கடற்கரைப் பகுதி கிராம ஊராட்சிகளில் குடும்ப அளவிலான அடிப்படை கணக்கெடுப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஏழைகள் மற்றும் மிகவும் ஏழைகள் தர மதிப்பீட்டின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கூட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்வதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளது. வாழ்வாதார மேம்பாட்டிற்காக கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, நாபின்ஸ் நிறுவனம் மூலம் வங்கிக் கடன் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீன் வலைப்பின்னும் கூடம், மீன் உலர் களம், கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் துவங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் துயர் குறைப்பு நிதி மற்றும் மீன் விற்பனை சங்கங்கள் அமைத்து, கடன் மீட்பு நிதி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகளுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஏற்கனவே செயல்பட்டு வரும் முதல்நிலை மாவட்டங்களில் செயல்பட்டு வரும் திட்டப் பணிகள் வெற்றிப் பாதைகளை அறிந்து கொள்ள பட்டறிவுப் பயணங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. ■

திட்ட இயக்குநர் அவர்களால் மாவட்டச் செயலாக்க அலுவலர்களுக்கான ஆய்வு

முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களால், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட செயல்பாடுகள் குறித்து, திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து மாவட்ட செயலாக்க அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் 16.06.2017 அன்று மத்திய திட்ட மேலாண்மை அலகில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் போது திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் மற்றும் அனைத்து மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் பகுதி 1 மற்றும் பகுதி 2 மாவட்டங்களில் திட்டத்தின் பணிகளை துரிதப்படுத்துவதுடன், கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை விட நடப்பு ஆண்டில் கூடுதலாக நிதிச் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், திட்டத்தின் ஒவ்வொரு பணியாளரும் துடிப்புடனும், விரைவாகவும் திட்டப் பணிகளை செயல்படுத்திட வேண்டுமெனவும், திட்டத்தின் செயல்பாடுகளை இணையதளம் மூலம் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள கைப்பேசி செயலி மூலம் உடனுக்குடன் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்து, பணிகளை விரைவுபடுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். ■

சூரிய ஒளி மூலம் மீன் மற்றும் காய்கறிகள் உலர வைக்கும் இயந்திரம் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல்

கன்னியாகுமரியில் அமைந்துள்ள ஸ்டெல்லா மேரீஸ் இன்ஸ்டியூட் ஆப் மேனேஜ் மெண்ட் ஸ்டடீஸ் தொண்டு நிறுவனம் மூலம் சூரிய ஒளி மூலம் மீன் மற்றும் காய்கறிகள் உலர வைக்கும் இயந்திரத்தினை திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களும் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட திட்ட இயக்குநர் திரு. ராகுல் நாத், இ.ஆ.ப., அவர்களும் இணைந்து மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், நிதி ஆலோசகர் (குறுந்தொழில்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்) திரு. மீரா பாண்டியன், நபார்டு வங்கி மண்டல மேலாளர் திரு. மார்டின் பிரகாசம் மற்றும் அருட்சகோதரி ரோஸ் பிரான்சிஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் சுமார் 300க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

ஸ்டெல்லா மேரீஸ் நிறுவனம், மக்களுக்குப் பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளிக்கும் நிறுவனமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மூலம் குமரி மாவட்டத்தில் மீன் உற்பத்தி நிறுவனத்தை ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டது. மேலும் பெண்கள் வாழ்வாதாரத்திற்காக கணவனின் வருவாயையே சார்ந்துள்ளனர். இந்நிலை மாறி பெண்கள் முன்னேறி வர பெண்களுக்கு சிறப்புப் பயிற்சி இந்நிறுவனத்தில் வைத்து நடத்த ஏற்பாடுகள் செய்து தரப்படும். ■

விழுப்புரம் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குதல்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், அனுமந்தை பல்லவன் கிராம வங்கியின் சார்பாக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 8 கடற்கரையோர ஊராட்சிகளில் செயல்படும் 34 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 136 இலட்சம் வங்கிக் கடனாக கூனிமேடு சமுதாய கூட்ட அரங்கில் 05.07.2017 அன்று வழங்கினார்.

நீண்ட நாட்களாக வங்கிக் கடன் ஏதும் கிடைக்காமல் முடங்கிக் கிடந்த சுய உதவிக் குழுக்களை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் இதே கூனிமேடு சமுதாய கூட்ட அரங்கிற்கு வரவழைத்து சிறப்பு தர மதிப்பீடு செய்து, வங்கிக் கடன் வழங்கிட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த துரித செயல்பாட்டிற்குக் காரணமான பல்லவன் வங்கி மண்டல மேலாளர் திரு. தங்கராஜ், அனுமந்தை கிளை மேலாளர் திருமதி. சுதா ஆகியோருக்கு சிறப்பான பாராட்டுதல்களை கூடுதல் இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் போது விழுப்புரம் மாவட்டச் செயலாக்க அலுவலர் திருமதி. தாரா ஈஸ்வரி, சமுதாய வளர்ச்சி அலுவலர், கணக்கு அலுவலர், நிறுவன வளர்ச்சி மேலாளர், இளநிலை வல்லுநர்கள் மற்றும் கூட்டு வள மையப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டத்தில் திட்டப் பணிகள் கூட்டாய்வு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களின் தலைமையில், நிதி மற்றும் நிர்வாக மேலாளர், முதுநிலை ஊரக நிதி மேலாளர், செயற்பொறியாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர் மற்றும் தகவல் தொழில் நுட்ப மேலாளர் ஆகியோர் இணைந்து திருவள்ளூர் மாவட்டத்தில் திட்டத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளின் நிலை குறித்து 07.07.2017 அன்று கூட்டாய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது இம்மாவட்டத்திலுள்ள 10 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகங்கள், 3 கூட்டு வள மையங்கள் மற்றும் மாவட்டச் செயலாக்க அலுவலகம் ஆகியவை வரையறுக்கப்பட்ட வினாத்தாளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டன.

ஆய்வின் போது கண்டறியப்பட்ட விவரங்கள் குறித்து மாலையில் மாவட்டச் செயலாக்க அலுவலகத்தில் விவாதிக்கப்பட்டு, குறைகளை நிவர்த்தி செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டன. ■

உலக வங்கிக் குழுவினரின் மக்கள் நிலை ஆய்வு

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்திட, 19.06.2017 அன்று திருமதி. இஸபெல்லா அசிசியலு, திரு. ஸ்டீவன் வாட்கின், திருமதி. மரியா பிளான்கா அமடோநின், திரு. குந்தன் சிங், திரு. யுவராஜ், மாநில வல்லுநர்கள் திருமதி. கீதா, திரு. கருப்பையா மற்றும் திரு. விக்டர் ஆகியோர் வேலூர் மாவட்டம் வருகை தந்தனர்.

இக்குழுவினர் குடியாத்தம் ஒன்றியம், சிங்கல்பாடி ஊராட்சியில் செயல்படும் மக்கள் அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஒத்தத் தொழில் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களை நேரடியாக சந்தித்து, வாழ்வாதார முன்னேற்றம் வளர்ச்சி அடைந்துள்ளதா என்பதைக் கேட்டறிந்தனர்.

சிங்கல்பாடி ஊராட்சியினைச் சேரந்த இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு பெற்றுள்ள விபரத்தை கலந்துரையாடல் மூலம் கேட்டறிந்தனர். மேலும் இப்பகுதியில் பெண்கள் தென்னை மரம் ஏறும் பயிற்சி பெற்றுள்ளதையும், மரம் ஏறும் பெண்களையும் சந்தித்தனர். இந்த ஆய்வின் போது வேலூர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கே. சம்பத்குமார் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் உடனிருந்தனர்.

இந்த ஆய்விற்குப் பின்னர் உலக வங்கிக் குழுவினர், வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. எஸ். ஏ. இராமன், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து, வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சிறப்பாக செயல்படுகிறது என்றும், மக்களின் வாழ்வாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது என்றும் கூறியதுடன், புதுவாழ்வு திட்டம் முடிவடைவது குறித்தும் பேசினர். இம்மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சிறப்பான செயல் பாட்டிற்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் உலக வங்கிக் குழுவினர் பாராட்டினர். ■

மகளிருக்கு ஆட்டோக்கள் வழங்குதல்

கரூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மகளிருக்கு வாகனங்கள் ஓட்டுவதற்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களுக்கு ஓட்டுனர் வில்லை பெற்றுத் தரப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பயிற்சிக்குப் பின் மாவட்ட தொழில் மையம் மற்றும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்றுத் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி ஓட்டுநர் பயிற்சி பெற்ற திருமதி. மாசிலாமணி, திருமதி. லதா, திருமதி. அன்புசெல்வி மற்றும் திருமதி. நளினி ஆகியோருக்கு 19.06.2017 அன்று, கரூர் மாவட்ட ஆட்சியர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் ஆட்டோக்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ச. சூர்யபிரகாஷ், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ம. ஜெய்கணேஷ், உதவித் திட்ட மேலாளர்கள், களப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

கரூர் மாவட்டம்

விடை கொடுப்போம் புதுவாழ்வு திட்டத்திற்கு! கை கொடுப்போம் புதிய திட்டத்திற்கு!!

தமிழக முன்னாள் முதல்வர் 'அம்மா' அவர்களின் எண்ணத்தில் 2005ஆம் ஆண்டு உதித்த புதுவாழ்வு திட்டம், சுமார் 12 ஆண்டுகள் பயணத்துடன், ஜூன் 2017 உடன் நிறைவடைவதாக அரசு அறிவித்துள்ளது.

12 வருடங்கள் – 144 மாதங்கள் – 624 வாரங்கள் என நகர்ந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்தாலே பிரமிப்பாக உள்ளது. மக்களுக்கான நிதியை மக்களே திட்டமிட்டு – மக்களே செயல்படுத்தி – மக்களே கண்காணிப்பதா? என ஏளனம் செய்தவர்களையும், சாத்தியமில்லை என கூப்பாடு போட்டவர்களின் எண்ணத்திற்கு மாறாக, தனது பயணத்தை சீராக நிறைவு செய்துள்ளது புதுவாழ்வு திட்டம்.

'இரவுகள் நீளலாம்; ஆனால் விடிந்தே ஆக வேண்டும்' என்றான் ஒரு கவிஞன். அதுபோல வறுமை ஒழிப்பிற்கான பயணத்தின் வாகனம் 'புதுவாழ்வு' என்பதிலிருந்து, 'வாழ்வாதார இயக்கம்' எனும் புதிய வாகனத்தில் பயணித்து, வறுமை ஒழிப்புப் பணிகள் தொடர்ந்து பயணிக்கட்டும் அதன் இலக்கு எட்டும் வரை. வறுமை இருள் நீங்கி, வளமை எனும் விடியல் வரும் வரை.

ஏறத்தாழ 1.07 இலட்சம் குழுக்கள், 4465 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், 4463 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் என எண்ணற்ற சக்கரங்கள் உருவாக்கப்பட்டுள்ளதால், வறுமை ஒழிப்பு எனும் தேர் சீராக பயணிப்பதில் பிரச்சனைகள் இராது. இவ்வமைப்புகள் எல்லாம் 'விதைகள்'. விதைத்தவர்கள் காணாமல் போனாலும், வேறு நிலத்தில் விதைக்கப் போய் விட்டாலும், விதைத்த விதைகள் தூங்காது விருட்சமாய் வளரும்.

சமூகத்தில் சமூக பொருளாதார ரீதியில் புறம் தள்ளப்பட்ட சுமார் 1.37 இலட்சம் மாற்றுத் திறனாளிகள், சுமார் 1.27 இலட்சம் நலிவுற்றோரின் ஏற்றத்திற்கு புதுவாழ்வு திட்டத்தின் உதவி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

சுமார் 4.50 இலட்சம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சி மூலம் அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக புதுவாழ்வு திட்டத்தின் நிதி 'விதை' போல் சிறு அளவிலானது. அந்த நிதியைக் கொண்டு செய்த பணிகளை விட, பிற துறைகளின் மூலம் தகுதி வாய்ந்த ஏழை மக்களுக்கு பெற்றுத் தந்த உதவிகள் (Convergence) ஏராளம்.

மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை, கடன் உதவி, உதவி உபகரணங்கள், நலிவுற்றோர் / ஏழைகளுக்கான வீட்டு மனைப் பட்டா, இலவச வீடுகள், பல்வேறு அரசு சான்றிதழ்கள், தனிநபர் இல்ல கழிப்பிடங்கள், சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி, வங்கி நேரடிக் கடன், தொழில் கடன், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம், முதியோர் உதவித் தொகை, பொது மக்கள் பயன் பெறும் வகையில் ஊராட்சிதோறும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் பொது சேவை மையங்கள் என புதுவாழ்வு திட்டம் தொடாத – எட்டாத சிகரங்கள் எதுவுமில்லை என பெருமிதப்படலாம்.

புதுவாழ்வு திட்டத்தின் பரிணாமமே தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் எனும் மாபெரும் திட்டத்திற்கு வித்து என்பதை யாவரும் அறிவர். புதுவாழ்வு திட்டத்தினை தேசிய வள மையமாக (NRO) அங்கீகரித்தது அதன் செயல்பாட்டிற்கு மேலும் ஒரு சான்று.

கந்து வட்டிக்கும், நுண்நிதி நிறுவனங்களுக்கும் புதுவாழ்வு எனும் பேரே எட்டிக் காயாய் கசக்கும். ஆனால் எண்ணற்ற ஏழை மக்களுக்கு புதுவாழ்வு திட்டம் தினந்தோறும் உச்சரிக்கும் தாரக மந்திரம்.

திட்டத்தினை வழி நடத்திய மரியாதைக்குரிய ஊரக வளர்ச்சி முதன்மை செயலர், திட்ட இயக்குநர், கூடுதல் திட்ட இயக்குநர்கள், மாநில வல்லுனர்கள், சக மாவட்ட திட்ட மேலாளர்கள், திட்டப் பணியாளர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக கிராம அமைப்புகளின் பொறுப்பாளர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஜூன் 2017 உடன் நிறைவடைந்துள்ள புதுவாழ்வு
திட்டத்திற்கு விடை கொடுப்போம்...!

புதியதாக மலரப் போகும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத்
திட்டத்தினை வணங்கி வரவேற்போம்...!!

– ஜி. குமரன், MSW., MBA., LLB.,
நாமக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 5,000 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 100 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்!

மாண்புமிகு ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் அறிவிப்பு!!

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 22.06.2017 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு பதிலுரை வழங்கி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் செய்திட்ட அறிவிப்புகள் வருமாறு.

ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்பு கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாக பராமரிக்க நடவடிக்கை :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதி களிலுள்ள அரசுப் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள், சமுதாய நலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுய உதவிக் குழு கட்டடங்கள் போன்ற சமுதாய உட்கட்டமைப்புகள் மற்றும் அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 5,000 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 100 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல் :

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள சுய உதவிக் குழுக்கள் சுய சார்புத்தன்மை அடையவும், சுய தொழில்கள் மூலம் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்காகவும், சமுதாய முதலீட்டு நிதி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 5,000 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

சுய தொழில் செய்ய விரும்புகிற சுய உதவிக் குழுக்களுக்கு, வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும். இதற்கென 100 கோடி ரூபாய் 2017-2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க நிதியிலிருந்து வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் மூன்றாம் கட்டமாக 95 வட்டாரங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக 6 கோடி ரூபாய் வழங்குதல் :

தமிழ்நாடு மாநில உரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், உயரிய அளவிலான கடன், வங்கியின் மூலம் கிடைக்கப் பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூன்றாம் கட்ட 95 வட்டாரங்களில் உள்ள 4,000 சுய உதவிக் குழுக்களுக்கு, தலா 15,000 ரூபாய் வீதம் 6 கோடி ரூபாய் ஆதார நிதியாக இந்த ஆண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்திலிருந்து வழங்கப்படும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஈஷா அவுட்ரீச் (ISHA OUTREACH) நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் பெண்களுக்கு விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்குதல் :

ஊரக ஏழை மக்களுக்காக தமிழ்நாடு மாநில உரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. இந்த இயக்கத்தின் கீழ், விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத பல்வேறு தொழில்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ஈஷா அவுட்ரீச் நிறுவனமும், விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத பல்வேறு தொழில்களுக்கான பயிற்சிகளை இளைஞர்களுக்கு வெற்றிகரமாக வழங்கி, சுய வேலை வாய்ப்புடன் கூடிய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈஷா அவுட்ரீச் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில், பெண்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

1000 நகர்ப்புற இளம் பெண்களுக்கு சமையலறை மற்றும் வீட்டு உபயோக மின் சாதனங்கள் பழுது பார்த்தல் பயிற்சியளித்து, மேற்படி சாதனங்களை பழுது பார்க்க மகளிர் சேவை மையங்களை அமைக்கப்படும் :

வீட்டு உபயோக சாதனங்கள், சமையலறை சாதனங்கள் பழுதினை நன்முறையில் விரைவாக செய்த முடிக்க சேவையாளர்களை உருவாக்கும் நோக்கோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1000 நகர்ப்புற இளம் பெண்களுக்கு வீட்டு உபயோக சாதனங்கள் மற்றும் பழுது பார்த்தல் பயிற்சி வழங்கப்படும். மேற்கண்ட சாதனங்களுக்கான பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் சேவைகளுக்கென பயிற்சி பெற்ற பெண்களை உள்ளடக்கிய ஓர் கூட்டமைப்பை உருவாக்கி, பிரத்யேகமாக உள்ள கணினி செயலி அல்லது தொலைபேசி அழைப்பு மையம் மூலம் எவரும் எளிதில் கேட்டுப் பயன் பெறும் சேவை மையங்கள் உருவாக்கப்படும்.

இத்தகைய சேவை மையங்கள் பரீட்சார்த்த முறையில் நடப்பு ஆண்டில் பெருநகரங்களில் அமைக்கப்படும். இதன் மூலம் மக்களுக்குத் தரமான சேவையும், பெண்களுக்குத் திறன் வளர்ப்பும், வருமான ஈட்டுதலும் உறுதி செய்யப்படும்.

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000க்கும் குறையாத மகளிர் உட்பட 1,00,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஏழை குடும்பங்களைச் சார்ந்த 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட 50,000க்கும் குறையாத மகளிர் உட்பட 1,00,000 இளைஞர்கள் பயனடையும் வகையில் இவ்வாண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழிற்திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் சுய வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இதில் குறைந்தபட்சம் 50,000 மகளிருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மேற்கண்ட வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும்.

180 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு தலா ரூ. 2.5 இலட்சம் வீதம் குறுந்தொழில் தொடங்க 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்குதல் :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 180 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு தொழில் தொடங்க தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 4 கோடியே 50 இலட்சம் கடனுதவி வழங்கப்படும்.

3,000 விவசாயிகள் பயன் பெறும் வகையில் 7 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனம் அமைத்தல் :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், 3000 விவசாயிகளை உள்ளடக்கிய 190 உற்பத்தியாளர் குழுக்கள் இணைந்து பயன் பெறும் வகையில், நாகப்பட்டினம் மாவட்டம், திருப்பூண்டி (கிழக்கு) ஊராட்சியில் 7 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனம் அமைக்கப்படும்.

15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டடம் மற்றும் 20 மீன் வலை பின்னும் தளம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள கடலோர சமுதாய மக்களின் பயன்பாட்டிற்கென 15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் 20 மீன் வலைப்பின்னும் கூடங்கள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

2,000 மீனவர்களுக்கு கடன் மீட்டு நிதியாக 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் வழங்கப்படுதல் :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள மீனவர்களை பெருங்கடன் சுமையிலிருந்து மீட்கவும், இடைத்தரகர்கள் மற்றும் பெரும் வியாபாரிகள் மூலம் அதிக வட்டியிலான கடன் பெறுவதை குறைக்கும் வகையிலும், கடன் மீட்பு நிதி வழங்கப்படும். இந்த ஆண்டு 2,000 மீனவர்களுக்கு கடன் மீட்பு நிதியாக 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு துயர் குறைப்பு நிதியாக 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்குதல்:

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள 129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு துயர் குறைப்பு நிதியாக 2 கோடியே 58 இலட்சம் வழங்கப்படும். இந்நிதி, இயற்கை இடப்பாடுகள் காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பின் துயரிலிருந்து மீள, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் அறிவித்தார், ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 7,000 கோடி வங்கிக் கடன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் அறிவிப்பு

தமிழகத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் 32 ஆயிரத்து 848 கோடி ரூபாய் கடனாக அளிக்கப்பட்டுள்ளதாக கூறிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் 03.07.2017 அன்று சட்டப் பேரவையில் விதி எண் 110-ன் கீழ் நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 7,000 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்படும் என்று தெரிவித்தார். இது குறித்த விவரங்கள் வருமாறு.

தமிழகத்தில் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான கடன் உதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் மூலம் பெற்றுத் தருவதன் வாயிலாக பெண்கள் மேம்பாடு அடையவும் மற்றும் கடன் சுமையிலிருந்து விடுபடவும் வழிவகை செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கென கடந்த 6 ஆண்டுகளில் வங்கிகள் மூலம் ரூ. 32,848 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 7,000 கோடி வங்கிக் கடன் அளிக்கப்படும்.

மேலும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக, தலா ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் 1000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டடங்கள் ரூ. 600 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்றும் சட்டப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ■

மகளிருக்கு ஆட்டோ வழங்கும் விழா

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை ஒன்றியத்தில் 20வது கோடை விழா கடந்த 17.06.2017 மற்றும் 18.06.2017 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு வடநேரே, இ.ஆ.ப., அவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. பொன்னி, இ.கா.ப., அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் ஓட்டுநர் பயிற்சி பெற்ற மகளிருக்கு தாட்கோ மானியத்துடன் கூடிய ரூ. 18 இலட்சம் மதிப்புள்ள 7 ஆட்டோக்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் புதுவாழ்வு திட்டத்தின் அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாட்டுக் கோழி வளர்ப்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் உதவிகரமாக இருப்பது நாட்டுக் கோழி வளர்ப்பாகும். சரிவிகித தீவனம் கொடுத்து, நோய் தடுப்பு முறைகளையும் பின்பற்றி வளர்த்தோமானால் நாட்டுக் கோழி வளர்ப்பு அதிக இலாபகரமான தொழிலாக அமையும்.

நாட்டுக் கோழி குஞ்சுகளை அடைகாப்பானில் பராமரித்தல்

செயற்கை வெப்பம் அளித்தல்

குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்த பிறகு அவற்றினுடைய உடம்பில் உள்ள இறகுகள் முழு வளர்ச்சி அடையும் வரை உடல் வெப்ப நிலையை ஒரே சீராக வைத்துக் கொள்ள முடியாத காரணத்தால் செயற்கை வெப்பம் அளிப்பது இன்றியமையாதது ஆகும். குஞ்சுகளை அடைகாப்பானில் விடுவதற்கு முன் கொட்டகையைச் சுத்தம் செய்து வைக்க வேண்டும்.

சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் அடைகாப்பானை அமைக்க வேண்டும். குஞ்சுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப குஞ்சுக்கு வெப்பம் அளிக்கக் கூடிய மின்சார பல்புகளைப் பொருத்த வேண்டும். குஞ்சுகளை வளர்க்கப் புரூடர் தகடுகள் அல்லது அட்டைகள் அல்லது பந்திப் பாய்களை ஒன்றோடொன்று இணைத்து, வட்ட வடிவில் அமைப்பது நல்லது. இந்த அடைகாப்பானுக்குள் 4 செ.மீ. உயரத்திற்கு நெல் உமி அல்லது மர இழைப்புச் சுருள் அல்லது கடலைத் தோல் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றைப் பரப்ப வேண்டும்.

கூளத்தின் மீது சுத்தமான பழைய செய்தித் தாள்களை (இரண்டு தாள்) பரப்பி விட வேண்டும். சிறிய குஞ்சுகளுக்குத் தீவனத்திற்கும் உமிக்கும் உள்ள வித்தியாசம் அறியும் பருவம் வரை தினந்தோறும் பழைய செய்தித் தாள்களைப் போட வேண்டும். மறுநாள் பழைய செய்தித் தாள்களை அகற்றி விட்டுப் புதிய தாள்களைப் போட வேண்டும். பொதுவாக குளிர் காலங்களில் முதல் 10 நாட்களுக்கும், கோடை காலங்களில் 7 நாட்களுக்கும் செயற்கை வெப்பம் அளித்தல் போதுமானது. மழைக் காலங்களிலும், பனிக் காலங்களிலும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு அளிக்க வேண்டும்.

முதல் வாரத்தில் குஞ்சுகள் சௌகரியமாக இருக்கும்படி மின் விளக்குகளின் எண்ணிக்கை மற்றும் உயரத்தை சரி செய்ய வேண்டும். செயற்கை வெப்பம் அளித்திட 60 வாட்ஸ் மின் விளக்குகளை தேவையான உயரத்தில் தொங்கவிட வேண்டும். மழைச்சாரல் அல்லது குளிர்ந்த காற்று கொட்டகைக்குள் புகாமல் இருக்க, மெல்லிய கோணித் துணியைக் கொண்டு பக்கவாட்டு சுவரின் மேல் சுமார் 2 அடி உயரத்திற்கு மட்டும் திரை கட்டித் தொங்கவிட வேண்டும். சுமார் 250 குஞ்சுகளுக்கு 60 வாட்ஸ் மின் விளக்கு பொருத்திய மூன்று புரூடர் வட்டங்கள் அமைக்க வேண்டும்.

அடைகாப்பானில் குஞ்சுகளின் தேவைக்கேற்றார்போல் செயற்கை வெப்பத்தை அதிகரித்தோ, குறைத்தோ அளித்தல் வேண்டும். தேவையான வெப்ப அளவில் குஞ்சுகள் பரவலாக இருக்கும். செயற்கை வெப்பம் அளிக்க மின்சாரம் இல்லாத சமயங்களில் கரி அடுப்பின் மீது இரும்புச் சட்டிகளைக் கவிழ்த்து அல்லது பானைகளை வைத்து குஞ்சுகளுக்குச் செயற்கை வெப்பத்தை அளிக்கலாம். அடைகாப்பானுக்குள் எந்த நேரத்திலும் 50 சதவீத கோழிகள் தண்ணீர், தீவனம் சாப்பிட்டுக் கொண்டும், சுறுசுறுப்பாக சுற்றித் திரிந்து கொண்டும் இருக்க வேண்டும். மற்றவை வெப்பத்திற்காகவே பல்புகளுக்கு அடியில் (குளிர்கால நேரங்களில் இருப்பது போலவே) கோழிக் குஞ்சுகள் அடைகாப்பானுக்குள் காணப்பட வேண்டும். இது முறைப்படியாக அமைக்கப்பட்ட அடைகாப்பான் ஆகும்.

குஞ்சுகளுக்கு முதல் 5 நாட்களுக்கு தண்ணீருடன் எதிருயிரி மருந்தும், பி காம்ப்ளக்ஸ் வைட்டமின் மற்றும் வைட்டமின் ஏ கலவையையும் கலந்து கொடுக்க வேண்டும். கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி வைட்டமின் ஏ மருந்தை 1000 குஞ்சுகளுக்கு 30 முதல் 40 மில்லி அளவும், பி காம்ப்ளக்ஸ் மருந்தை 150 மில்லியும், எதிருயிரி மருந்து 1 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் வீதம், அனைத்தையும் தண்ணீரில் கலந்து வைக்க வேண்டும். வைட்டமின் மருந்துகளை முதல் 5 நாட்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு முறையும், பின்பு ஒவ்வொரு மாதமும் 5 நாட்களுக்கு அளித்தல் அவசியம்.

சுற்றுப்புற வெப்ப நிலையைப் பொருத்து 7 – 12 நாட்களுக்குப் பின் வட்ட அமைப்பை நீக்கி விடலாம். அப்போது கூளப்பொருள் 6 செ.மீ. உயரம் இருக்கும்படி செய்ய வேண்டும். நான்கு நாட்களுக்குப் பிறகு குஞ்சுகளுக்கு இரவு நேரங்களில் மட்டும் 12–14 நாட்கள் வரை கூடுதல் வெப்பம் கொடுக்க வேண்டும். குஞ்சுகளுக்கு 2 வாரத்திற்குப் பிறகு இரவில் விளக்கொளி தேவைப்பட்டால் தேவையான அளவு தரலாம். ஏனெனில் இரவில் தொடர்ந்து வெளிச்சம் அளித்தால் இயற்கையிலேயே சுறுசுறுப்பான நாட்டுக் கோழிகள் ஒன்றையொன்று கொத்திக் கொள்ளும் வாய்ப்பு அதிகமாகும். அதை தவிர்த்தல் நல்லது.

கடந்த சில மாதங்களாக கோழி வளர்ப்பு குறித்து பல்வேறு விபரங்களை அறிந்து கொண்டீர்கள். இனி வரும் மாதங்களில் வேறு பல விபரங்கள் குறித்து தெரிந்து கொள்வோம். ■

(நிறைவு)

- முனைவர் வே. புருஷோத்தமன்,
வணிக மேலாண்மை மற்றும் கூட்டாண்மை வல்லுநர்,
புதுவாழ்வு திட்டம், சென்னை.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 3rd Floor, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034 (62,600 Copies circulated) an Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079. Editor : S. CHINNAPPAN.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month